**<u>சார்பு நீதிமன்றம், திருவைகுண்டம்.</u>**

**நாள் : 23.01.2025**

**வழக்கு எண் : OS. 253/2023**

**சாட்சி பெயர் : திரு.மோசஸ்/ DW.2**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எனது சொந்த ஊர் பண்ணைவிளை ஆகும்.
2. நான் சத்துணவு அமைப்பாளராக பணியாற்றி 2011ல் ஓய்வு பெற்றுவிட்டேன்.
3. வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் நான் குடியிருக்கும் வீட்டிற்கு பக்கத்து தெருவில் குடியிருந்து வருகிறார்கள்.
4. தாவா சொத்து இருக்கும் இடத்திற்கு அடுத்த தெருவில் நான் குடியிருந்து வருகிறேன்.
5. தாவா சொத்தானது கல் கட்டி, கம்பி வேலி போட்டு அடைத்துள்ளார்கள் என்றால் சரிதான்.
6. தாவா வழக்கு பற்றி சுமார் 6 மாதங்களுக்கு முன்பாக 1வது பிரதிவாதி திரு.ஜெபசிங் சொல்லி எனக்குதெரியும். அவர் வழக்கு விபரம் பற்றி என்னிடம் கூறினார்.
7. தாவா சொத்திற்கு கம்பி வேலிபோடும் போது எனக்கு தெரியாது.
8. வா.சா.ஆ.1 ஆவணம் தவறானது என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அந்த ஆவணத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல.
9. 2வது வாதி அவருக்கு பட்டா மூலம் பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்த சொத்தைத்தான் 1வது வாதிக்கு தான செட்டில்மன்ட் பத்திரம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்றாலும் அந்த ஆவணத்தை பற்றியும் பட்டா பற்றியும் எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றாலும் சரியல்ல.
10. மேற்சொன்ன பட்டா மற்றும் தானசெட்டில்மன்ட் பத்திரத்தையோ நான் வாங்கி பார்க்கவில்லை.
11. 1வது பிரதிவாதி சொன்னதன் அடிப்படையில் நான் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.
12. தாவா சொத்தானது வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் அவர்கள் தான் கல் கட்டி வேலி அமைத்துள்ளார்கள் என்றாலும் பிரதிவாதிகளுக்காக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனது பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றாலும் சரியல்ல.

13. தாவா சொத்தை வாதிகள் நீண்ட காலமாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் நீண்டகாலமாக அனுபவிக்கவில்லை.

14. நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து சம்மன் எதையும் நான் பெறவில்லை.

15. 1வது பிரதிவாதிதான் என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார் என்றால் சரிதான்.

16. தாவா சொத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் தாவா சொத்தை பிரதிவாதிகள் அனுபவித்து வந்தார்கள் என்று சொல்வது பொய் என்றாலும் சரியல்ல.

17. நான் பத்திர அலுவலகத்தில் சாட்சி கையெழுத்து போடுவதற்காக அடிக்கடி செல்வேன் என்றால் சரியல்ல.

18. நான் பிரதிவாதிக்கு வேண்டிய ஆள் என்பதால் அவருக்காக அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

K NAMBIRAJAN

Digitally signed by K NAMBIRAJAN
Date: 2025.01.23 17:58:27 +0530

**சார்பு நீதிபதி,**
**திருவைகுண்டம்**